YISHUN SECONDARY SCHOOL
Subject :Tamil (1204)
Level & Stream: Sec 2NT

<table>
<tr><th colspan="2">The Curriculum and Approaches to Learning</th><th>Key Programmes / Competitions</th></tr>
<tr><td colspan="2">கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் புதிய பாடத் திட்டத்தின் அடிப்படையில் மாணவர்கள் அடிப்படைத் திறன்களான ஆறு திறன்களையும் பெறுவதற்காக ஈசூன் உயர்நிலைப் பள்ளி, தமிழ்மொழிக் கற்பித்தலில் பல்வேறு உத்திகளையும், கற்றல் பயிற்று வளங்களையும், ஊடகங்களையும் மாணவர்களின் வயது மற்றும் அனுபவத்திற்கேற்ப வழங்கி மகிழ்வூட்டும் கற்றலை வழங்கி வருகிறது. மாணவர்களின் ஆர்வ நிலையைத் தூண்டவும் அவர்களின் ஆற்றலை வளப்படுத்தவும் கலாச்சார பண்பாட்டு விழுமியங்களைப் பற்றிய தகவல்களைத் தகவல் தொழில்நுட்பத்தோடு இணைந்து தமிழ்மொழி கற்றுக் கொடுக்கப்படுகிறது.</td><td>பொங்கல் விழா, இரு வார தமிழ்மொழி விழா \ சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகப் போட்டிகள், தமிழ்மொழி மாதப் போட்டிகள்</td></tr>
<tr><th>Term / Week</th><th>Learning Experiences<br>(chapter, activity)</th><th>Learning Outcomes & Assessment</th></tr>
<tr><td>1</td><td><u>படித்தல்:</u><br><br>நட்பு, இரு நண்பர்கள், பொழுதுபோக்கு, அப்பாவின் பொழுதுபோக்கு என்னும் தலைப்பில் 2A தொகுதி 1 மற்றும் தொகுதி 2 அமைந்த பனுவல்களைப் படிப்பர்.<br><br><u>எழுதுதல்:</u><br><br>அனைத்துலக நண்பர் தினக் கொண்டாட்டம்,நல்ல நட்பு, பறக்கும் மனிதப்பறவை, பழந்தமிழர் வாழ்வியல் விளையாட்டுகள் என்னும் தலைப்பில் 2A தொகுதி 1 மற்றும் தொகுதி 2 அமைந்த பனுவல்களை தமது முன்னறிவோடும் பின்புலத் தகவலோடும் தொடர்புபடுத்திப் பகுதியைப் படிப்பர்.</td><td><u>நோக்கங்கள்:</u><br><br>பகுதியைப் படித்துப் புரிந்துகொள்வர்; சரியான உச்சரிப்போடு பொருத்தமான இடங்களில் நிறுத்தி வாய்விட்டுப் படிப்பர்.<br><br>பகுதியைப் படித்துப் புரிந்துகொண்டு விடுபட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைக்கொண்டு நிரப்புவர். நோக்கத்திற்கு ஏற்றவாறு சரியான மொழியமைப்பைப் பயன்படுத்தித் தெளிவாகப் பதிலுரை எழுதுவர்.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | வீரதீர விளையாட்டுகள், நானும் ஒரு படைப்பாளி பகுதியைப் படித்துப் புரிந்துகொண்டு தொகுதி 1மற்றும் 2ல் கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிப்பர். | சூழலுக்குத் தக்கவாறு பொருத்தமான சொற்களையும் சொற்றொடர்களையும் பயன்படுத்தி தெளிவாக எழுதுவர்; வரைவர்.<br><br>சமூக ஊடகத்தளத்திலுள்ள கருத்துகளுக்குப் பொருத்தமாகக் கருத்துகளை எழுத அறிவர். சூழலுக்கேற்பப் பொருத்தமான சொற்களையும் தொடர்களையும் பயன்படுத்தித் தன்னம்பிக்கையோடு இணையாளருடன் சேர்ந்து பதில் எழுதுவர். எழுதுவதற்குரிய நோக்கமறிந்து பொருத்தமான கருத்துகளைத் தெளிவாக எழுதுவர். நோக்கத்திற்கு ஏற்றவாறு சரியான சொல்வளத்தைப் பயன்படுத்தி எழுத்துவழியாகக் கருத்துப் பரிமாறிக்கொள்வர். |
| | **<u>கேட்டல் மற்றும் பேசுதல்:</u>**<br><br>**நண்பன் அளித்த ஊக்கம், அரங்கேற்றம்** என்னும் தலைப்பில் 2A தொகுதி 1 மற்றும் தொகுதி 2 ஒலிப்பகுதியைக் கவனமாகக் கேட்டு வினாக்களுக்குப் பொருத்தமாகப் பதில் அளிப்பர்.<br><br>**<u>இலக்கணம்:</u>**<br><br>சொற்புணர்ச்சி**,** எண்ணுப்புணர்ச்சி இணைமொழிகள்,குற்றியலுகரம், முற்றியலுகரம், | விளையாட்டின்மூலம் தாங்கள் இதுவரை அறிந்த பொழுதுபோக்குகளைப்பற்றிப் பேசுவர். பட்டம் விடுதல்; ஆளில்லா வானூர்தி ஆகியவற்றிற்கு இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப்பற்றிக் கலந்துரையாடுவர். அரங்கேற்றம் என்னும் ஒளிக்காட்சியைக் கவனமாகப் பார்த்துக் கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடையளிப்பர்.<br><br>சொற்புணர்ச்சி வகைகளை அறிந்துகொள்வர்**.** |

| | | |
|---|---|---|
| | ஆகிய இலக்கணக் கூறுகளின் பயன்பாட்டை அறிந்துகொள்வர்.<br><br>**<u>இலக்கியம்:</u>**<br><br>மரபுத்தொடர்கள், பழமொழி, திருக்குறள்<br><br>சிறுகதையின் கூறுகளை நினைவுகூர்வர்.<br>படித்த சிறுகதையைப்பற்றிக் கலந்துரையாடுவர்.<br><br>கவிதை என்னும் இலக்கிய வடிவத்தைப்பற்றி அறிந்துகொள்வர். | மரபுத்தொடர்களின் பொருளை அறிந்து பயன்படுத்துவர். ஓட்டை உடைசல்', 'சட்டதிட்டம்' என்னும் இணைமொழிகளைப் பொருளுணர்ந்து பயன்படுத்த அறிந்துகொள்வர். |
| 2 | **<u>படித்தல்:</u>**<br><br>சுற்றுச்சூழல் பாதுகாப்பு,இயற்கைக்கு வேண்டுகோள், உலகத்தைப் பாதுகாப்போம், மூவேந்தர்களை அறிவோம் என்னும் தலைப்பில் 2A தொகுதி 3 மற்றும் தொகுதி 4 அமைந்த பனுவல்களைப் படிப்பர்.<br><br>**<u>எழுதுதல்:</u>**<br><br>நம் நிலம் நம் எதிர்காலம், இயற்கை உரம்,அதியமானும் ஔவையாரும், சேரனது கொடைச் சிறப்பு என்னும் தலைப்பில் 2A தொகுதி 3 மற்றும் தொகுதி 4 பகுதியைப் படித்துப் புரிந்துகொண்டு விடுபட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புவர்.<br><br>அலுவல் சார்ந்த மின்னஞ்சலில் உள்ள முக்கியக் கூறுகளை அறிந்துகொள்வர். | **<u>நோக்கங்கள்:</u>**<br><br>பகுதியில் இடம்பெற்றிருக்கும் சில அருஞ்சொற்களின் பொருளை அறிந்துகொள்வர்.<br>பனுவலில் இடம்பெற்றிருக்கும் கடின சொற்களுக்குரிய பொருளை அறிந்துகொள்வர்.<br>மூவேந்தர்களைப்பற்றி அறிந்துகொள்வர்.<br>மூவேந்தர்களைப்பற்றிய எண்ணங்களையும் கருத்துகளையும் பகிர்ந்துகொள்வர்.<br><br>சூழலுக்குத் தக்கவாறு பொருத்தமான சொற்களையும் சொற்றொடர்களையும் பயன்படுத்தி மின்னஞ்சலுக்குப் பதில் எழுதுவர்.<br>நோக்கத்திற்கு ஏற்றவாறு சரியான மொழியமைப்பைப் பயன்படுத்தித் தெளிவாகப் பதிலுரை எழுதுவர்.<br>சூழலுக்குத் தக்கவாறு பொருத்தமான சொற்களையும் சொற்றொடர்களையும் பயன்படுத்தி மின்னஞ்சலுக்குப் பதில் எழுதுவர். |

| | | |
|---|---|---|
| | **கேட்டல் மற்றும் பேசுதல்:**<br><br>இது முடிவன்று,இதுவே தொடக்கம்! ,கவரி வீசிய காவலன் என்னும் தலைப்பில் 2A தொகுதி 3 மற்றும் 4 அமைந்த ஒளிக்காட்சியைக் கவனமாகப் பார்த்து வினாக்களுக்குப் பொருத்தமாகப் பதில் அளிப்பர்.<br><br>**இலக்கணம்:**<br><br>தொகுதி 3 மற்றும் 4இல் பெயரெச்சம், வினையெச்சம், எதிர்மறை பெயரெச்சம், வினையெச்சம், உடன்பாட்டு வினைமுற்று, எதிர்மறை வினைமுற்று ஆகிய மொழிக்கூறுகளின் பயன்பாட்டை அறிவர். தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று, குறிப்பு பெயரெச்சம் அறிந்துகொள்வர்.<br><br>**இலக்கியம்:**<br><br>கொட்டமடித்தல், சிட்டாய்ப் பறத்தல், செவிசாய்த்தல் ஆகிய மரபுத்தொடர்களின் பொருளை அறிந்து பயன்படுத்துவர். இணைமொழிகளின் பொருளை அறிந்து பயன்படுத்துவர். | ஒலிப்பகுதியைக் கவனமாகக் கேட்டு வினாக்களுக்குப் பொருத்தமாகப் பதிலளித்துத் தங்கள் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்.<br><br>கொடுக்கப்பட்டுள்ள சூழலுக்கேற்ப ஒரு நாடகத்தை மாணவர்கள் நடித்துக் காட்டுவர். |
| 3 | **படித்தல்:** நடப்புச் செய்திகள், சுவைச் செய்தி ஒன்றைப்பற்றிப் படித்து அறிந்துகொள்வர். பணத்தின் பயணம் என்ற சுவைச் செய்திகள் வழியாக சிங்கப்பூர்ப் பணத்தாள்களைப்பற்றி அறிவர். | **நோக்கங்கள்:**<br><br>• கருப்பொருளையொட்டிய நடப்புச் செய்தி ஒன்றைப் படித்துக் கூடுதல் தகவல்களை அறிந்துகொள்வர். உரையாடல் பகுதியைப் |

| | | |
|---|---|---|
| | புதியதோர் உலகம் என்னும் பகுதியைப் படிப்பர்.<br><br>**<u>எழுதுதல்:</u>**<br><br>எதிர்காலக் கண்டுபிடிப்பு; புதுமையில் பழமை என்னும் பகுதியைச் செய்வர்.<br><br>கருத்துவிளக்கப்படக் கருத்தறிதல் பகுதியைப் படித்துப் புரிந்துகொண்டு வினாக்களுக்குப் பொருத்தமான விடையை எழுதுவர்.<br><br>**<u>கேட்டல் மற்றும் பேசுதல்:</u>**<br><br>சேற்றில் கால் வைத்தால்தான் ஒலிப்பகுதியைக் கேட்பர். சி<br><br>ந்தித்துச் செயற்படு என்னும் ஒளிக்காட்சியைப் பார்த்து பேசுவர்.<br><br>**<u>இலக்கணம்:</u>** இணைப்புச் சொற்கள்பற்றி விரிவாக அறிந்துகொள்வர். செய்வினை, செயப்பாட்டுவினை வாக்கியங்களைப்பற்றி அறிந்துகொள்வர். மேள தாளம், பழக்க வழக்கம் ஆகிய இணைமொழிகளைப் பொருளுணர்ந்து சூழலுக்கு ஏற்பப் பயன்படுத்துவர். வாக்கிய வகைகளைப்பற்றி அறிந்துகொள்வர்.<br><br>**<u>இலக்கியம்:</u>** தட்டிக்கேட்டல், தட்டிக்கழித்தல், தட்டிக்கொடுத்தல் ஆகிய மரபுத்தொடர்களைப் பொருளுணர்ந்து சூழலுக்கு ஏற்பப் பயன்படுத்துவர். | பொருத்தமான குரல் ஏற்ற இறக்கத்துடனும் பொருளுணர்ந்தும் வாய்விட்டுப் படிப்பர்.<br><br>பகுதியைப் படித்துப் புரிந்துகொண்டு கோடிட்ட இடத்தில் பொருத்தமான விடையை எழுதுவர்.<br><br>ஒலிப்பகுதியின் வாயிலாகப் பெறப்படும் தகவல்களைக் கவனமாகக் கேட்டு அவை உணர்த்தும் பொருள் குறித்த புரிந்துணர்வை வெளிப்படுத்துவர். ஒளிக்காட்சியைப் பார்த்து அது உணர்த்தும் பொருள் குறித்த புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்.<br><br>பயிற்சிநூல் – பயிற்சி 1.5 ல் கொடுக்கப்பட்டிருக்கும் சூழலுக்கேற்பப் படங்களைக்கொண்டு உரையாடலை உருவாக்கி எழுதுவர். |

| | | |
|---|---|---|
| | கவிதைகளைப் படித்து மகிழ்வர். | |
| 4 | • **<u>படித்தல்:</u>** பேச வாரீர்! பனுவலைத் தெளிவான உச்சரிப்போடும் சரளத்தோடும் படிப்பர்.<br><br>**<u>எழுதுதல்:</u>** பங்காற்றத் தொடங்கு, சமூகத்திற்கு நம் பங்கு பகுதியைப் படித்துப் புரிந்துகொள்வர்.<br><br>**<u>கேட்டல் மற்றும் பேசுதல்:</u>**<br><br>மாற்றத்தை உருவாக்குவோம் என்னும் ஒலிப்பகுதியைக் கேட்பர்.<br><br>படங்களையொட்டிய கருத்துகளைப் பேச்சுத்தமிழில் தெளிவாகவும் சரளமாகவும் தன்னம்பிக்கையுடனும் பேசுவர்.<br><br>**<u>இலக்கணம்:</u>**<br><br>அளவைப்பெயர், தொகுதிப்பெயர் ஆகியவற்றைப்பற்றி அறிந்துகொள்வர்.<br><br>**<u>இலக்கியம்:</u>** வாயைக்கட்டுதல், தட்டிப்பறித்தல், வாலாட்டுதல் ஆகிய மரபுத்தொடர்களைப் பொருளுணர்ந்து சூழலுக்கு ஏற்பப் பயன்படுத்துவர்.<br><br>கவிதைகளைப் படித்து மகிழ்வர். | பகுதியைப் படித்துப் புரிந்துகொண்டு கோடிட்ட இடத்தில் பொருத்தமான விடையை எழுதுவர்.<br><br>ஒலிப்பகுதியைக் கேட்டுப் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர். |